*பிரசார்பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*11 09 2026 FRIDAY 6 30 PM*
*வணக்கம் - மாநிலச்செய்திகள்*

***<u>தலைப்புச் செய்திகள்</u>***

*1) தேச எல்லைகள் மற்றும் மொழிகளுக்கு அப்பாற்பட்டது திருக்குறள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*2) பிரிக்ஸ் உச்சி மாநாடு உலகிற்கு நன்மை பயக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.*

*3) முதுபெரும் தமிழறிஞரும், பட்டிமன்ற நடுவருமான பேராசிரியர் சாலமன் பாப்பையா இன்று மதுரையில் காலமானார்.*

*4) சென்னை பட்டினப்பாக்கம், நீலாங்கரை கடற்கரை பகுதியில் விநாயகர் சிலைகளை கரைக்க அனுமதிக்க முடியாது என்று தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.*

*5) உலக பாரா துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.*

*>>>>>><<<<<*

*தேச எல்லைகள் மற்றும் மொழிகளுக்கு அப்பாற்பட்டது திருக்குறள் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் தமிழில் இதனை பதிவு செய்துள்ள அவர், பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக புதுதில்லி வந்துள்ள ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புட்டினுக்கு, திருக்குறளின் ரஷ்ய மொழிபெயர்ப்பு நூலை பரிசளித்ததாக கூறியுள்ளார்.*

*தெய்வப்புலவர் திருவள்ளுவரின் அளப்பரிய ஞானத்தை திருக்குறள் பறைசாற்றுவதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*>>>>>><<<<<*

*பிரிக்ஸ் உச்சி மாநாடு உலகிற்கு நன்மை பயக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இந்த உச்சிமாநாடு நாளை புதுதில்லியில் தொடங்கவுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.*

*நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இது உதவிடும் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக புதுதில்லி வந்துள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்களை வரவேற்பதாகவும் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<*

*முதுபெரும் தமிழறிஞரும், பட்டிமன்ற நடுவருமான பேராசிரியர் சாலமன் பாப்பையா இன்று மதுரையில் காலமானார். அவருக்கு வயது 90.*

*தமிழ் இலக்கியத்தையும், பட்டிமன்ற மேடைகளையும் தனித்துவமான பேச்சாற்றலால் சிறப்பித்தவர் சாலமன் பாப்பையா என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், சாலமன் பாப்பையாவின் மறைவு, தமிழ் மொழிக்கும், தமிழ் இலக்கிய உலகிற்கும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*நகைச்சுவை கலந்த அறிவார்ந்த பேச்சால் பல தலைமுறையினரிடையே தமிழின் பெருமையை எடுத்துச் சென்ற அவரின் பங்களிப்பு என்றென்றும் நினைவுகூரப்படும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.*

*தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர், முதலமைச்சர் திரு. விஜய், திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மற்றும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், பட்டிமன்ற பேச்சாளர்களும், தமிழறிஞர்களும், திரையுலக பிரபலங்களும் அன்னாரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.*

*கலைமாமணி, பத்மஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு விருதுகளை சாலமன் பாப்பையா பெற்றுள்ளார்.*

*பத்மஸ்ரீ விருது பெற்றது குறித்து மகிழ்ச்சி தெரிவித்து வானொலிக்கு அவர் அளித்த பேட்டியில் இந்த விருதை பட்டிமன்றத்திற்காக உழைத்த அனைவருக்கும் சமர்ப்பிப்பதாக கூறியிருந்தார்.*

*(சவுண்ட் பைட்-சாலமன் பாப்பையா 73 செகண்ட்ஸ்)*

*12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டிமன்றங்களை நடத்தியுள்ள சாலமன் பாப்பையா, பாய்ஸ், சிவாஜி உள்ளிட்ட திரைப்படங்களிலும் நடித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*சென்னை பட்டினப்பாக்கம், நீலாங்கரை கடற்கரை பகுதியில் விநாயகர் சிலைகளை கரைக்க அனுமதிக்க முடியாது என்று தென்மண்டல பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.*

*இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த, தீர்ப்பாயம் இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.*

*விநாயகர் சிலைகளை பிற இடங்களில் கரைப்பது தொடர்பாக வரும் 16ஆம் தேதி தமிழக அரசு விளக்கமளிக்க வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் மின்வெட்டு நிலவுவதாக எதிர்க்கட்சிகள் தவறான தகவல்களை பரப்பி வருவதாக சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. ரவிசங்கர் கூறியுள்ளார்.*

*இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்உற்பத்தியை மேலும் அதிகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*போதைப்பொருள் பயன்பாட்டை தடுக்கவும் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திரு. ரவிசங்கர் கூறினார்.*

*>>>>><<<<<*

*ஊழலற்ற நிர்வாகத்தை த.வெ.க. அரசு உறுதி செய்துள்ளதாக கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. காந்திராஜ் கூறியுள்ளார்.*

*திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் உள்ள வேளாண் விளைபொருள் ஏல மையத்தில் இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*(சவுண்ட் பைட் - காந்திராஜ் 39 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*தமிழகத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சி இடம்பெறும் கூட்டணி தான் வலிமைபெறும் என்று அக்கட்சி தலைவர் திரு. தொல் திருமாவளவன் கூறியுள்ளார்.*

*தருமபுரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசியல் பதவிகளுக்கான உருவான இயக்கமல்ல தமது கட்சி என்று தெரிவித்தார்.*

*த.வெ.க. தலைமையிலான கூட்டணியின் பெயரை முடிவு செய்த போது, மதச்சார்பற்ற என்ற வார்த்தையை இடம்பெறச் செய்தது விடுதலை சிறுத்தைகள் கட்சி தான் என்றும் அவர் கூறினார்.*

*த.வெ.க தலைமையிலான மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி, கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. தொல். திருமாவளவன் தெரிவித்தார்.*

*>>>>><<<<<*

தனியார் பேருந்து கட்டண உயர்வை தடுக்க த.வெ.க. அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

சமூகவலைதளத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ள அக்கட்சி, விநாயகர் சதுர்த்தி விடுமுறையை ஒட்டி, சொந்த ஊருக்கு செல்ல விரும்பும் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில், தனியார் பேருந்துகளின் கட்டணங்கள் உயர்ந்துள்ளதாக கூறியுள்ளது.

>>>>>><<<<<

காஞ்சிபுரம் மாவட்டம், பரந்தூர் அருகேயுள்ள மதுரமங்கலம் கிராமத்தில் செமிகண்டக்டர் பூங்கா அமைப்பதற்காக விளைநிலங்களை கையகப்படுத்தும் பணிகளை தமிழக அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வேளாண் நிலங்கள் பாதிக்கப்படும் என்பதற்காக பரந்தூர் விமான நிலைய திட்டத்தை கைவிட்ட த.வெ.க. அரசு தற்போது, வேறொரு திட்டத்திற்காக விளைநிலங்களை கையகப்படுத்துவது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களில் இந்த பூங்கா பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

>>>>>><<<<<

## மாவட்டச் செய்திகள்

கடலூர் மாவட்டத்தில் மாநில அரசின் திட்டங்கள் செயலாக்கம் குறித்து அம்மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர் திரு. மோகன் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<

அரியலூர் அரசு பள்ளியில் அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணித ஆய்வகத்தை ஆட்சியர் திருமதி. மிருனாளினி இன்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியராக திரு. Abdul Razick இன்று பொறுப்பேற்றார்.

>>>>>><<<<<

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் ஒரு கோடியே 85 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ள சறுக்கு விளையாட்டு தளம் விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்பட உள்ளதாக ஆட்சியர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியுள்ளார்.

>>>>>><<<<<

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் மீனவர் குறைதீர் முகாம் இன்று நடைபெற்றது.

>>>>>><<<<<

## விளையாட்டுச் செய்திகள்

உலக பாரா துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

கொரியாவின் Changwon-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் கலப்புக் குழுப் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை, ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>><<<<<

ஜப்பான் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Sukant Kadam அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 21-19, 21-16 என்ற செட்கணக்கில் மெக்ஸிகோவின் Maximiliano Avila-வை வென்றார்.

***இப்போட்டியில் Umesh Vikram Kumar, Pramod Bhagat, Abhijeet Sakhuja ஆகியோரும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளனர்.***

***>>>>>><<<<<***

***வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரணாய் மற்றும் Rakshita Sree அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.***

***>>>>>><<<<<***

***எகிப்தில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Aradhya Kshitij அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.***

***>>>>>END<<<<<***